சுவைமிகு சிற்றுண்டி,
குளிர்பானம்
தேநீர் - கோப்பிகளுக்கு
ரவர் கோப்பி
அன் கூல் பார்
324, மணிக்கூட்டு
கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23891
சிற்றுண்டி ஆடர்கள்
ஏற்றுக்கொள்ளப்படும்.

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/=

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
புத்தாண்டு
வாழ்த்துக்கள்
உரித்தாகுக!
ரவர் கோப்பி
அன் கூல் பார்
324, மணிக்கூட்டு
கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23891

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸூ மார்கழி மீ 17 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஆகிர் பிறை 19 (01 01-1986) UTHAYAN —A LIVELY TAMIL DAILY கதிர்:- 36

கூட்டணி யோசனைகளின் அடிப்படையில்

# அர்த்தமுள்ள தீர்வுக்கு இந்தியா வலியுறுத்து

## வன்முறைகளில் மக்கள் பாதிக்கப்படுவது குறித்துக் கவலை

### ஜே. ஆரிடம் டிக்ஸிற் நேரில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 1

தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்துள்ள மாற்று யோசனைகளின்அடிப்படையில் அர்த்தமுள்ள தீர்வுஒன்றை இலங்கை அரசு விரைவில் காணவேண்டும்.

இப்படி இந்தியா, இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் வன்முறைகளினால் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவது குறித்தும் இந்தியா, இந்நாட்டு அரசிடம் கவலை தெரிவித்துள்ளது.

இந்தியாவின் இக்கருத்துக்களை இந்தியத் தூதுவர் திரு. ஜே என் டிக்ஸிற் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனாவிடம் கடந்த திங்கட்கிழமை தெளிவாகக் கூறினார்.

இந்தியாவில் இருந்து திரும்பிய கையோடு தூதவர் திரு. டிக்ஸிற் திரு ஜெயவர்த்தனாவைச் சந்தித்தார்.

இலங்கை தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளித்து அவர்களுடன் அர்த்தமுள்ள உடன்பாடு ஒன்றுக்கு இலங்கை அரசாங்கம் விரைவில் வரவேண்டும் என இந்தியா விரும்புகின்றது என்றும் திரு. டிக்ஸிற், ஜனாதிபதியிடம் சொன்னார்.

கூட்டணியின் மாற்று யோசனைகளை மிகக் கவனமாக ஆராய்ந்து ஒரு தீர்வை வகுக்க வேண்டும்.—

பேச்சுவார்த்தை மூலமான சமாதானத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு உதவுவதே இந்தியாவின் விருப்பம்— என்றும் திரு. டிக்ஸிற் தெரிவித்தார்.

### ஆராய்வு

கூட்டணியின் யோசனைகளை அரசாங்கம் இப்போது தீவிரமாக ஆராய்ந்து வருவதாக ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன

(4-ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டையிலிருந்து விடுதலையான 21 இளைஞர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 1

கடந்த திங்கட்கிழமை யாழ் கோட்டை முகாமில் இருந்து 21 இளைஞர்கள் விடுவிக்கப்பட்டனர். அவர்களின் பெயர்கள் வருமாறு:


1. நல்லையா ஜெகதீஸ்வரன்.
2. மாணிக்கம் இராசலிங்கம்.
3. வேலுப்பிள்ளை கோபாலபிள்ளை.
4. வைரவசுந்தரம் ஜெயசீலன்.
5. தேவேந்திரன் நவரட்ணராசா.
6. கந்தையா சுந்தரலிங்கம்.
7. கணபதி பாலசுந்தரம்.
8. கந்தசாமி சிறிதரன்.
9. கந்தசாமி சிவகுமார்.
10. ஐயர் யோகராசா.
11. விஸ்வலிங்கம் பாலரட்ணம்.
12. சிங்கராசா சேகர்.
13. இராஜப்பு செல்வராஜா.
14. செல்லத்துரை மனிதராசா.
15. மாணிக்கம் தவராசா.
16. மாணிக்கம் இராசரத்தினம்.
17. கணபதிப்பிள்ளை விஜயரட்ணம்.
18. அருணன் ஜீவானந்தன்.
19. செல்வரத்தினம் ஜெயசிங்கம்.
20. பாலசுப்பிரமணியம் பாலச்சந்திரன்.
21. யேசு செபஸ்தியன்.

## வேதாரணியத்தில் ஊர்வலம்

லண்டன், டிச. 31

தமிழ்நாடு வேதாரணியத்தில் உண்ணாவிரதமும், ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றும் இன்று (செவ்வாய்க்கிழமை) நடத்தப்பட்டது.

தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கும் அப்பகுதி மக்களுக்கும் இடையில் எழுந்த மனக்கசப்பை அடுத்தே இவை நடத்தப்பட்டதாக பி.பி. சி. இன்று அறிவித்தது.



1986
வருக
வாசகர்கள்,
விளம்பரதாரர்,
ஆதரவாளர்கள்,
அபிமானிகள்
அனைவருக்கும்
எமது
புத்தாண்டு
வாழ்த்துகள்
--உதயன்

## புத்தாண்டு முதல் யாழ் வாடகைச் சபை மீண்டும் செயற்படும்

யாழ்ப்பாணம், ஜன. 1

ஒருவருட காலமாக யாழ்ப்பாணத்தில் இயங்காது இருந்த யாழ் வாடகைச் சபை புதிய ஆண்டு தொடக்கம் மீண்டும் இயங்கும்.

திரு. பி. கதிரவேலாயுதபிள்ளையைத் தலைவராகவும், திரு சி. துரைரத்தினம், ஜனாப் எம். எஸ் ரகிம் ஆகியோரை அங்கத்தவர்களாகவும் கொண்டு புதிய வாடகைச் சபை அமைக்கப்பட்டுள்ளது.

வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சினால் இந்தச்சபை நியமிக்கப் பட்டுள்ளது. சென்ற ஆண்டு வாடகைச் சபை இயங்காதகாரணத்தால் வாடகை குடியிருப்புத் தொடர்பான சுமார் 80 விண்ணப்பங்கள் விசாரணை செய்யப்படாது தேங்கிக் கிடக்கின்றன.

இப்புதிய சபை முதன் முதலில் இவ்விசாரணைகளைத் துரிதப்படுத்தும். புதிய விண்ணப்பங்களையும் ஏற்கும்.

யாழ் வாடகைச் சபை செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் மேற்கண்ட தகவல்களை உதயனுக்குத் தெரிவித்தார்.

## ஊர்காவல் படையின் 30 துப்பாக்கிகள் பறிக்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜன. 1

மதவாச்சிப் பகுதியில் முப்பது ஊர்காவல் படை வீரர்களிடம் இருந்து துப்பாக்கிகள் பறிக்கப்பட்டன. அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரிலேயே துப்பாக்கிகள் பறிக்கப்பட்டன.

இத் தகவலை மதவாச்சி உதவிப் பொலீஸ் அதிபர் திரு. ஏ. ஈ. டி. அல்விஸ் தெரிவித்தார்.

புனைவைப் பகுதியில் 12 ஊர்காவல் படை வீரர்களிடம் இருந்தும், மதவாச்சிப் பகுதியில் 18 ஊர்காவல் படை வீரர்களிடம் இருந்தும் துப்பாக்கிகள் பறிக்கப்பட்டன.

இதனிடையில், கொள்ளைச் சம்பவம் ஒன்று தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சிலரில் ஒரு ஊர்காவல் படை வீரரும் முன்னாள் பொலீஸ் அதிகாரியும் இருந்தனர் எனறும் அறிவிக்கப்பட்டது.

வேறு ஒரு கொள்ளை முயற்சிச் சம்பவத்தில் 2 ஊர்காவல் படை வீரர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

முச்சந்தி முரளி



வா, வா, புத்தாண்டே புதிய புத்தாண்டே எங்கள் கஷ்டம் நீங்க உந்தன் உதவி தேவை.
கொடிதாய் மாறாதே நலமே தருவாயே!

### சுபநேரம்

01 - 01 - 1986
புதன்கிழமை
சுபநேரம்:
4-59 முதல் 6-29வரை
ராகுகாலம்:
1-29 முதல் 1-59 வரை
இவை இராசிக்கும் பகலுக்கும் பொருந்தும்
வருடப் பிறப்பு

## விபத்து 25 பேர் பலி

காத்மண்டு, டிச. 31

நேபாள விமானப் படைக்குச் சொந்தமான விமானம் விழுந்து நொறுங்கியதில் 25 பேர் மரணமானார்கள்.

## சர்வதேச சமாதான ஆண்டு

நியுயோர்க், டிச. 31

1986 ஆம் ஆண்டு சர்வதேச சமாதான ஆண்டாகப் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

அதையொட்டி ஐ.நா. செயலாளர் நேற்று விசேஷ செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தார்.

## பூஸாவிலிருந்து 35 பேர் விடுதலை

மட்டக்களப்பு, ஜன. 1

பூஸா இராணுவ முகாமிலிருந்து 35 தமிழ் இளைஞர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டார்கள்.

இவர்கள் அனைவரும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள்.

அண்மைக் காலத்தில் பாதுகாப்புப் படையினர் மட்டக்களப்பில் நடத்திய தேடுதல் வேட்டையின்போது இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தார்கள்.

நேற்று இ. போ. ச. பஸ் மூலம் பூஸாவிலிருந்து அவர்கள் மட்டக்களப்புக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

# உலக மனச்சாட்சியே தமிழ் இனத்தை காப்பாற்று! - கூட்டணி

சென்னை, டிச. 31

இலங்கைத் தமிழரை அழிவில் இருந்து காப்பாற்ற உதவுமாறு உலகின் மனச்சாட்சிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி வேண்டுகோள் விடுத்து உள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை பொலிற்பீரோ கூட்ட முடிவில் கூட்டணி விடுத்த அறிக்கையில் இந்தவேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இலங்கைத் தமிழர்மீது அடக்குமுறைகளை ஏவுவதில் தென் ஆபிரிக்க இனவெறி அரசையே இலங்கை அரசு மிஞ்சி விட்டது. இலங்கை அரசின் அடக்குமுறைகளுக்கு அஞ்சி வீடுகளை விட்டு காடுகளுக்குள் தஞ்சம் புகுந்த தமிழர்கள் மீண்டும் ஊர்களுக்குத் திரும்ப விடாது ஆயுதப் படையினர் தடுக்கின்றனர்.

நிலாவெளியில் அண்மையில் கொல்லப்பட்ட 10 பேரும் அப்பாவித் தமிழ் மக்கள். அவர்கள்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## புத்தாண்டும் சந்திப்புகளும்

இன்று புத்தாண்டு. பழைய ஆண்டு மறைந்து புதிய ஆண்டு பிறக்கும் இவ்வேளையில் பல முக்கிய அரசியல் சந்திப்புகள் நிகழ்ந்துள்ளன. மேலும் பல நிகழவுள்ளன.

### தொண்டா - ராஜீவ்

சென்னை, டிச. 31

இந்தியாவிற்கு விஜயம் செய்திருக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் கிராமக் கைத்தொழில் அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை எதிர்வரும் 10ஆம் திகதி புதுடில்லியில் சந்திப்பார்.

இலங்கையில் இருக்கும்நான்கு லட்சம் இந்திய வம்சாவளியினருக்கு இலங்கை குடியுரிமை வழங்க வேண்டும் என்ற தமது கோரிக்கை பற்றி இந்தியப் பிரதமருடன் அவர் பேசுவார்.

தமது கோரிக்கையை இலங்கை அரசிடம் வற்புறுத்துமாறு இந்தியப் பிரதமரிடம் அவர் வேண்டுகோள் விடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சர் தொண்டமான் எதிர்வரும் ஐந்தாம் திகதி மதுரையில் தமிழக முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரனையும் சந்தித்துப் பேசவிருக்கிறார்.

### லலித் - டிக்ஸிற்

கொழும்பு, ஜன. 1

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்று யோசனைகள் குறித்து இந்தியத்தூதர் திரு. ஜே என் டிக்ஸிற் நேற்று செவ்வாய்க்கிழமை தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியுடன் விரிவாகப் பேச்சுக்கள் நடத்தினார்.

இதற்கு முன்னர் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவை திரு.டிக்ஸிற் சந்தித்து பேசியது தெரிந்ததே.

அந்த சந்திப்பு திங்களன்று இடம்பெற்றது.

அதைத் தொடர்ந்தே லலித் — டிக்ஸிற் பேச்சுக்கள் நேற்று நடந்தன.

### ராஜீவ் - சு. க. குழு

புதுடில்லி, டிச. 31

சுதந்திரக் கட்சி தூதுக்குழு சில தினங்களில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்திக்க உள்ளது புதுடில்லியில் இச்சந்திப்பு நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பம்பாய் காங்கிரஸ் கட்சி நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்ளச் சென்ற சுதந்திரக் கட்சிக் குழுவே இந்தியப் பிரதமரைச் சந்திக்க உள்ளது.

இக்குழுவின் தலைவர் அத்தனகலை எம். பி. யான திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி.

### சமசமாஜிகள் - போராளிகள்

சென்னை, டிச. 31

லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர்கள் குழு ஒன்று சென்னையில் தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளுடன் நேற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தியது.

தலைவர்கள் குழுவுக்கு கொழும்பு தெற்கு முன்னாள் எம் பியும் கட்சிப் பொதுச் செயலாளருமான திரு.பெர்னாட் சொய்சா தலைமை வகித்தார்.

ஒரு உள்நாட்டு யுத்தம் இலங்கையில் ஏற்படுவதை தாங்கள் விரும்பவில்லை என்று போராளிகளின் அமைப்புக்கள் இவர்களுக்குத் தெரிவித்ததாகவும், நாடு பிரிவதைத் தாங்கள் விரும்பவில்லை என்று சமசமாஜக் கட்சித் தலைவர்கள் போராளிகளுக்குத் தெரிவித்ததாகவும் கூறப்படுகின்றது.

அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை லங்கா சமசமாஜக் கட்சி ஆதரிக்கும் என்று கட்சித் தலைவர்கள் போராளிகளுக்கு தெளிவுபடுத்தினர் என்றும் தெரிகின்றது.

லங்கா சமசமாஜக் கட்சி குழு, பின்னர் தமிழ் நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் அகதி முகாம் ஒன்றையும் பார்வை யிட்டது.

## அரசமைப்பில் ஷரத்துக்களை சேர்க்க சர்வஜன வாக்கெடுப்பு

### அரசு திட்டமிட்டு வருவதாகத் தினேஷ் தகவல்

காலி, ஜன. 1

அரசமைப்பில் சில ஷரத்துக்களைச் சேர்ப்பதற்காக அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளது.

1986 முற்பகுதியில் இச்சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இப்படி மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவரும் மஹரகம எம்.பி யுமான திரு தினேஷ் குணவர்த்தன சொன்னார்.

காலியில் உள்ள மக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் மத்தியில் திரு தினேஷ் குணவர்த்தன பேசினார்.

திரு தினேஷ் குணவர்த்தன மேலும் சொன்னதாவது:

பொதுத் தேர்தல் நடத்தப்படலாம் என்ற ஊகத்தை முறியடிக்கும் நோக்குடன் தான் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த அரசு திட்டமிட்டுள்ளது.

அரசமைப்பில் சில திருத்தங்களைச்செய்யவும் சில ஷரத்துக்களைச் சேர்க்கவும் அரசாங்கத்துக்குத் தற்போது கஷ்டமாக உள்ளதாம்.

அக்கஷ்டத்தை நீக்கு முகமாக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி மக்கள் அனுமதியைப் பெற அரசு திட்டமிட்டுள்ளது.

மக்கள் அனுமதி கிடைத்தவுடன் அரசமைப்புச் சட்டத்தில் தேவையான முறையில் திருத்தங்களைச் செய்யலாம் என்று அரசு எண்ணுகின்றது—

இப்படி திரு. தினேஷ் குணவர்த்தன சொன்னார்.

# பண்டாரி ஓய்வு பெறுகிறார்

## அவரின் இடத்துக்கு இனி யார்?

இந்திய வெளியுறவுச் செயலாளர் ரொமேஷ் பண்டாரி, 1986 மார்ச் மாதத்துடன் ஓய்வு பெறுகின்றார்.

ராஜதந்திர வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

திரு. பண்டாரிக்கு வயது 58.

பாட்டியாலா மகாராஜாவின் புதல்வியை இவர் திருமணஞ் செய்தார்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்காக அன்னைக்குப் பின் பதவிக்கு வந்த பிரதமர் ராஜீவ் காந்தியினால் சிறப்புத் தூதுவராக இலங்கைக்கு அனுப்பப்பட்டவர்.

அன்னை இந்திராவினால் சிறப்புத் தூதுவராக அனுப்பப்பட்ட திரு. ஜி பார்த்தசாரதி ஒரு தமிழர் என்று இலங்கை அரசு அதிருப்தி தெரிவித்ததைத் தொடர்ந்து, பிரதமர் ராஜீவ், திரு. பண்டாரியை அனுப்பினார்

அதன் பின்னர்தான் இலங்கை இனப்பிரச்சினை குறித்து இந்தியாவின் அணுகு முறையும் மாறியது என்று சொல்லப்பட்டது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தைரியமாக பேசுங்கள் அர்ச்சனா உற்சாகம்!

"எங்கிருந்தாலும் வாழ்க" படத்தின் மூலம் அறிமுகமாகியவர் கல்யாண். இவர் மதுரைப் பகுதியைச் சேர்ந்தவர். சுறுசுறுப்புடைய இளைஞர்.

முதல் நாள் படப்பிடிப்பில் "தைரியமாகப் பேசுங்கள்" என்று அர்ச்சனா உற்சாகம் ஊட்டியதைப் பெருமையாகக் கூறுகிறார் கல்யாண்.

முதன் முதலில் "எங்கிருந்தாலும் வாழ்க" படத்தில் நடிக்கவாய்ப்புக் கொடுத்ததை மறக்க மாட்டேன் என்கிறார்.

அந்தப் படத்தில் இவர் பேசிய முதல் வசனம், "எந்த வீட்டுக் குயிலா இருந்தாலும் நீ என் கண்ணில பட்டுட்டா மயில் தான்"

இந்த வசனத்தை அர்ச்சனாவைப் பார்த்துப்பேசியபோது படபடப்பாக இருந்ததாம். அச்சமயம் தான் அர்ச்சனா "தைரியமாகப் பேசுங்கள்" என்று உதவினாராம்.

"கல்லூரியில் சேர்ந்து படிக்கவில்லை என்றாலும், திரைப்படக் கல்லூரியில் ஓர் கல்லூரி மாணவனாக நடித்ததில் பெருமைப்படுகிறேன்.

"நடிப்பதற்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்த ஒளிப்பதிவாளர் ராஜராஜன், டைரக்டர் ஆர். செல்வராஜா இருவரையும் என்றும் மறவேன்" என்கிறார் நன்றியோடு கல்யாண்.

### முன் சீட்டில் தேங்காய்!

தேங்காய் சீனிவாசன் வீட்டில் இருந்து படப்பிடிப்புக்குச் செல்லும் போது காரின் முன் சீட்டில் அமர்ந்து தான் செல்கிறார். அதுவே அவருக்கு ராசியாம்!

போகும் வழியில் கோயில் கோபுரங்களைக் கண்டு விட்டால், கைகளைக் கூப்பி வணங்காமல் விட மாட்டார். கோத்திரங்களையும் முணுமுணுக்கத் தொடங்கி விடுவார்.

ரஷ்யாவின்

## அணு ஆயுதபரிசோதனை 6 மாத இடை நிறுத்தம்

### தீர்மானம் காலாவதி

மாஸ்கோ, டிச. 31

அணு ஆயுத பரிசோதனைகளை நடத்துவது, ஏவாயுதங்களைத் தயாரிப்பது ஆகியவற்றை ஆறு மாதகாலத்துக்கு நிறுத்தி வைப்பது என்ற ரஷ்யாவின் ஒருதலைப் பட்சமான தீர்மானம் நேற்றுடன் காலாவதியாகியது.

இத் தீர்மானத்தை நீடிப்பது பற்றி ரஷ்யா இன்னும் அறிவிக்கவில்லை.

இதனால் ரஷ்யா மீண்டும் அணு ஆயுத பரிசோதனைகளை நடத்துவதிலும் அணு ஆயுதம் தயாரிப்பதிலும் ஈடுபடலாம் என்ற ஊகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஆகஸ்டு நடுப்பகுதியில் ரஷ்யா ஒரு தலைப் பட்சமான இத் தீர்மானத்தை வெளியிட்டதுடன், அமெரிக்காவும் இதற்கு சாதகமாக நடக்க வேண்டும் என்று நம்பிக்கையை வெளியிட்டது.

இதனிடையில், அமெரிக்கா நேவடா பாலைவனத்தில் ஹைட்ரஜன் குண்டு ஒன்றை வெடித்துப் பரிசோதனை செய்த சம்பவம், ஏற்கனவே இரண்டு நாடுகளினால் கடைப்பிடிக்கப்படும் ஆயுதபரிகரண உடன்படிக்கையை மீறுவதாகும்.

இப்படி ரஷ்ய செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' குற்றஞ்சாட்டியுள்ளது.

வெஸ்டபோ தாக்குதல்

# பாதுகாப்புச் சபை கண்டனம்

# தென் ஆபிரிக்கா மீது

## அகதிகள் கொலைக்கு பொறுப்பு ஏற்கவேண்டும் என தீர்மானம்

ஐ. நா., டிச. 31

வெஸ்டபோ மீது தென்னாபிரிக்காவின் அண்மைய தாக்குதலையும் இதனால் அஞ்சியோடிய அகதிகள் மிருகத்தனமாக கொல்லப்பட்டதையும் ஐ. நா. பாதுகாப்புச் சபை பலமாகக் கண்டித்துள்ளது.

இத்தகைய வலுத் தாக்குதல்களால் ஏற்பட்ட இழப்புகளுக்கு பிரிட்டோரிய அரசு ஈடு கட்ட வேண்டும் என அணிசேரா நாடுகள் தீர்மானம் வெளியிட்டிருந்தன.

மேற்படி தீர்மானம் 15 உறுப்பினர்கள் கொண்ட பாதுகாப்பு சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

எழுந்தமானமாக இத் தாக்குதலை மேற்கொண்டதற்கு தென்னாபிரிக்கா வகை சொல்ல வேண்டும்; அகதிகள் கொல்லப்பட்டதற்கு முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். இவ்வாறு பாதுகாப்புச் சபையின் கண்டனத் தீர்மானம் வலியுறுத்தியுள்ளது.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் போராளிகளைக் குறிபார்த்தே இது மேற்கொள்ளப்பட்டதாக தென்னாபிரிக்கா இதற்கு நியாயம் கற்பித்திருந்தது.

தென்னாபிரிக்காவின் இந்த நொண்டிச் சாட்டை பாரதமும் மற்றும் வேறு நாடுகளும் நிராகரித்துள்ளன.

### பதவி காலாவதி

வாஷிங்டன், டிச. 31

ஐ நா பந்தோபஸ்து சபையில் இந்தியா வகித்து வந்த உறுப்பினர் பதவி 1985 உடன் காலாவதியானது.

இரண்டு ஆண்டுகள் இந்தியா இப்பதவியை வகித்தது. ஐ. நாவின் இந்திய நிரந்தரப் பிரதிநிதி திரு நடராசன் கிருஷ்ணன் பந்தோபஸ்து சபையில் இந்திய உறுப்பினராகக் கடமையாற்றினர்.

### மாற்றம்

டோக்கியோ டிச 31

ஜப்பானிய அமைச்சரவை பெரிய மாற்றங்களுக்குள்ளாகியுள்ளது.

வெளிநாட்டமைச்சர் ஷின்டாரோ அபேயும் நிதியமைச்சர் நொபோறு டாக்கே ஷிட்டவுமே மாற்றம் செய்யப்படாத மந்திரிகளாவர் ஆட்டங் கண்டுவரும் பொருளாதாரத்துக்கு முட்டுக் கொடுக்கவே இந்த இரு அமைச்சர்களையும் நாகசோனே இன்னும் வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

## மதுபோதையை முகர மர்ம டோர்ச்லைட்

### அமெரிக்கா கண்டுபிடிப்பு 600 டாலர் அதன்விலை

நியூயோர்க். டிச, 31

மதுபோதையில் கார் ஓட்டுபவர்களை இலகுவில் கண்டுபிடிக்க புதுவித 'டோர்ச்லைட்' கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் இந்த டோர்ச்லைட்' டைக்கண்டு பிடித்துள்ளனர்.

மது வாசனையை முகரும் சக்திபடைத்த சாதனம் இந்த 'டோர்ச்லைட்' டில் பொருத்தப்பட்டு இருக்கும். வீடுகளில் பாவிக்கும் 'டோர்ச்லைட்' அமைப்பிலேயே இதுவும் இருக்கும்.

சாரதியின் வாயில் இருந்து 6 அங்குலத்தூரத்தில் இந்த டோர்ச்லைட் டைப் பிடித்துக் கொண்டால் போதும்.

மதுபோதையில் கார் ஓட்டுபவரைப் பொலீஸார் இலகுவில் பிடித்து விடலாம்.

இந்த 'டோர்ச்லைட்' டின் விலை 600 டாலர்கள் தான்.

### பூட்டோ மகனுக்கு 14 வருட கடூழியம்

பெஷாவர், டிச. 31

பாகிஸ்தான் விசேட ராணுவ நீதிமன்றம் முன்னாள் பிரதமர் பூட்டோவின் மகனுக்கு 14 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ளது.

ஆள் இல்லாமலே விதிக்கப்பட்ட இந்தத் தீர்ப்பில் தண்டனைக்குரியவரான முர்தாசா பூட்டோ நாடுகடத்தப்பட்ட நிலையில் டமாஸ்கஸ்ஸில் வசிக்கிறார்.

தமது சொந்த அரசியற் கருத்துக்களை அத்துமீறிப் பரப்புவதற்கு முயற்சித்தார்கள் என்ற பெயரில் இவருடன் சேர்த்து 37 அரசியல் அதிருப்தியாளர்களுக்கு இராணுவ நீதிமன்றம் இத் தீர்ப்பைச் சென்ற வாரம் வழங்கியது.

சந்தேக நபர்கள் எவர்களும் நீதிமன்றில் நிறுத்தப்படாமலே இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

### புகழ் மாலை

பீகிங், டிச 31

சீனத் தலைவர் டெங் ஸியா ஓபிங் 1985ஆம் ஆண்டின் சிறப்பு மனிதரெனப் பாராட்டுப் பெற்றுள்ளார்.

"டைம் சஞ்சிகை" இந்தப் பாராட்டை அவருக்கு வழங்கியுள்ளது.

## வெளி உலகில்

ரோம், வியன்னா

## விமானநிலைய தாக்குதல்

### பழிவாங்கப் போவதாக இஸ்ரவேல் எச்சரிக்கிறது

டெல் அவிவ், டிச. 31

ரோம், வியன்னா விமான நிலையங்களில் இடம் பெற்ற தாக்குதலுக்கு பழிவாங்கப் போவதாக இஸ்ரவேல் தெரிவித்துள்ளது.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக பலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் மறுப்பையும் அபுநிதால் கெரில்லா குழுவின் உரிமை கோரலையும் இஸ்ரவேல் மேலும் நிராகரித்துள்ளது.

இஸ்ரவேல் வெளிநாட்டு அமைச்சின் அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்ட பொழுது, பலஸ்தீனிய விடுதலை இயக்கம் எல்லாவற்றையுமே மறுத்து வரும் பழக்கம் கொண்டது அதனால் இதில் அதிக அர்த்தமில்லை. அபுநிதால் கெரில்லா குழுவினர் உரிமை கோருவதால் அவர்களே இதைச் செய்தனர் என்றும் பொருள்படாது எனத் தெரிவித்தார்.

பலஸ்தீனிய விடுதலை இயக்கம் தான் இந்தத் தாக்குதல் நடவடிக்கையில் சம்பந்தப்பட்டிருக்கவில்லையென தொடர்ந்து மறுத்து வருகிறது, இந்தத் தாக்குதலைக் கண்டித்துள்ள பலஸ்தீனிய விடுதலை இயக்கம் பொறுப்பானவர்களை அடையாளம் காண முயன்று வருவதாகவும் மேலும் தெரிவித்துள்ளது.

யார் பொறுப்பாளிகள் என முடிவு காணப்படாத இந்த தாக்குதல் சம்பவத்தில் 18 பேர் இறந்துள்ளனர். 120 பேர் பலத்த காயங்களுக்கு இலக்காகினர்.

பங்களாதேஷில்

## டாக்டர்கள் வேலை நிறுத்தம் நோயாளர் உயிரிழப்பு

டாக்கா, டிச. 31

பங்களாதேஷில் டாக்டர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தம் காரணமாக 25 நோயாளிகள் வரை சிகிச்சை கிடைக்காத நிலையில் மரணமடைந்துள்ளனர்

பங்களாதேஷின் வட பகுதி நகரான றங்பூர் வைத்தியசாலையிலேயே கூடுதலானவர்கள் இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரல், மற்றும் மூத்திர கோச நோய்களால் பாதிக்கப்பட்ட பலரே அவசர சிகிச்சை கிடைக்காத நிலையில் இறந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த வேலை நிறுத்தத்தில் நாட்டின் 40,000 டாக்டர்களும் பொறியியலாளர்களும் மற்றும் விவசாயத்துறை நிபுணர்களும் ஈடுபட்டுள்ளனர்.

உயர்ந்த அந்தஸ்து கூடுதலான ஊதியம் கோரியே இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


மின் பாவனையாளர் அனைவருக்கும்

# எமது புதுவருட வாழ்த்துக்கள்!

மின்சாரம் சிறப்பான சேவகன்! ஆனால் ஆபத்தான ஆசான்!

உங்கள் மின் இணைப்புக்களை மிக நுண்ணியமாக அமைத்துக் கொள்ளுங்கள். வீடுகள், தொழிற்சாலைகள், கடைகள் எதுவானாலும் எம்மால் சிறப்பானமுறையில் அமைத்துத் தரப்படும்.

சுந்தர்ஸன் உங்களுக்கு உத்தரவாதம், சுந்தர்ஸன் சிறப்புமிகு சேவை!

மின்சார உபகரணங்களில் நவீனம்! அதுவே எங்களின் விற்பனை சேவை!

மின் அடுப்பு & மின் விசிறிகள்! மின் நீர் இறைக்கும் இயந்திரங்கள்!!

நவ நவீன மின்சார உபகரணங்கள் !!!

மகாராஜாவின் S - லோன் பைப்புகள் & சகல அமைப்புகள் வடமாகாணத்தில் மின் உபகரணங்களை வெளிநாட்டிலிருந்து நேரடியாக இறக்குமதிசெய்து

குறைந்த விலையில் எங்கும் விற்பனை செய்யும் ஒரே ஸ்தாபனம்.

# 'சுந்தர்ஸன்'

மத்திய சந்தை,
மானிப்பாய்.

## "லிங்கா எலெக்ரிக்கல்ஸ்"

4 அடி 2 அடி ரியூப்லைற் செற்றுகளும், வட்ட ரியூப் லைற்றுகளும் மொத்தமாகவும் சில்லறையாகவும் சகாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

நமது மனம் நமக்கு வசமாக வேண்டும். மனம் அடங்கி விட்டால் பின்னர் வேறு ஒன்றும் தேவை இல்லை. ஒவ்வொரு நாளும் சிறிது நேரமாவது மனத்தை அமைதியாக வைத்துக் கொண்டு, புலன்களை கண்ட வழியில் சிதறவிடாமல் தியானத்தில் அமர வேண்டும். அப்படித் தியானம் செய்வதால் புத்தி தெளிவடையும். ஆசையையும் கோபத்தையும் அடக்குவதற்கு இது ஒப்பற்ற சாதனம்.

-காஞ்சி சுவாமிகள்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22073
01-01-86 த. பெ. 23

## புத்தாண்டு நம்பிக்கை

இன்று புதுவருடம். 1986ஆம் ஆண்டு பிறக்கிறது.

பழையன கழிந்து புதியன புகுதல் உலக மரபு. காலச்சக்கரத்தில வருடங்கள் வந்து போகின்றன. 1986 ஆம் வருடமும் அப்படியே.

ஆயினும் புதிதாக ஒன்று மலரும்போது அது நலலதையே செய்ய வேண்டும் என்ற ஆர்வமும் விருப்பமும் மனிதனுக்கு ஏற்படுவது இயல்பு. அதனாலேயே புது வருடம் பிறக்கும்போது அந்த ஆண்டில் மக்கள் நலமும் வளமும் பெற்றுச் சீரும் சிறப்புமாக வாழ வேண்டும் என்று விழைகின்றோம்.

பிறக்கும் புத்தாண்டை நன்னம்பிக்கையுடன் எதிர்கொண்டு வரவேற்கும் அதே வேளை, கடந்து போன வருடத்தின் நிகழ்ச்சிகள், பாதிப்புகளை மனம் அசை போடுவது இயற்கை.

அந்த வகையில் கழிந்த ஆண்டு - கடந்த ஆண்டு - ஈழம் வாழ் தமிழ் மக்கள் மறக்க முடியாத வருடம். அவர்கள் வாழ்வின் இருண்ட காலத்தில் முக்கிய பகுதி அது. மிகக் குறுகிய காலத்தை நினைத்து மன அலை எழும்போது—

1983 ஜூலை - அதாவது கறுப்பு ஜூலையில் தமிழர்களின் வாழ்வு தளரத் தொடங்கியது எனலாம். தென்னிலங்கையில் ஆண்டாண்டு காலமாக, மூன்று நான்கு தலைமுறைகளாக வாழ்ந்தவர்களில் மிகப் பெரும்பான்மையினர் தமது சொந்த மண்ணுக்கு - பூர்வீக மண்ணுககு இடம் பெயர்நத ஆண்டு அது.

அதனைத் தொடர்ந்து வந்த 1984 இல் தமிழர்கள் தங்கள் சொந்த மண்ணிலேயே நிர்க்கதிக்கு ஆளாகும் நிலைமை ஏற்பட்டது. நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொலையுண்டு நிலைமை மோசமாகியது.

1985ம் ஆண்டோ அதைவிட மிகமிகக் கொடூரமாக அமைந்து விட்டது. தமிழ் மக்கள்தாம் பிறந்து வளர்ந்த சொந்த இடத்தில் வாழ முடியாது அகதிகளாகும் நிலை வந்தது.

திருகோணமலை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய தமிழ்ப் பிரதேசங்களில் தமிழர்கள் விரட்டி அடிக்கப்படும் அளவுக்கு உயிர்க்கொலைகளும் அட்டூழியங்களும் அதிகம் இடம்பெற்றது கடந்த 1985 இல் தான்.

அவர்கள் மட்டுமா? யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழ்ந்த மக்களையே தமது சொந்தக் கிராமங்களை விட்டு அகதிகளாக வேறு இடம் சென்று புகலிடம் தேட வைத்ததும் 1985 தான். வல்வை, பருத்தித்துறை, காரைநகர், ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அவர்களில் சிலர்.

நாடோடிகளுக்குக் கூட உயிர்ப் பாதுகாப்பு உண்டு. ஆனால் ஈழத் தமிழனுக்கு அவன் இந்த நாட்டின் எந்தப் பகுதியில இருந்தாலும் உயிர் ஆபத்தே அன்றி உயிர்ப் பாதுகாப்பு இல்லை. அந்த அளவுக்கு தமிழன் ஒவ்வொருவனது வாழ்க்கையும் வேரோடு சாய்க்கப்பட்ட உச்சக்கட்டம் 1985 தான். இறந்தவர்கள் போக இருப்பவர்களையும் நடைப்பிணங்களாக மாற வைத்த ஆண்டு கடந்த வருடம் தான்.

இந்தக் குறுகிய காலத்தில் தமிழனுக்கு ஏற்பட்ட இழப்புகள் அனந்தம். அந்த நஷ்டங்களை ஈடு செய்வது எப்படி? முடியாது! முடியவே, முடியாது!!

உரிமைகள் இல்லாத, வாழ்வுச் சுதந்திரம் இல்லாத இந்த வாழ்க்கை எப்போது முடிவுக்கு வரும்? அப்போதுதான் தமிழனுக்கு நிம்மதி.

அந்த நிம்மதி கிடைப்பதற்குத் தமிழனுக்கு அரசியல், பொருளாதார, சமூக வாழ்க்கையில் பூரண சுதந்திரம் கிடைக்க வேண்டும்.

அது கைக்கு வரப் பெற்றால் மட்டுமே தமிழனுக்குப் புதுவாழ்வு கிடைக்கும். புனர் வாழ்வு தொடங்கத் தென்பும் தெளிவும் பிறக்கும்.

இன்று பிறக்கும் 1986 அதற்கு வழி செய்யும் என நம்பலாமா?

## பிறக்கின்ற 1986

— திருக்கோணமலைக்கவிராயர் —

பிறக்கின்ற எண்பத்தாறு
பிள்ளை போற் பிறக்க வேண்டும்
பேரிகை முழக்கம் நீங்கிப்
பேரின்பம் சிரிக்க வேண்டும்
கருக்கொண்ட பகைமை எங்கும்
கரைந்தன்பு உறைய வேண்டும்
உருக்கொண்ட இறைமை எங்கள்
உயிரென முழங்க வேண்டும்

*

காலத்திற்கேற்றவாறு
ஞாலத்தை நகர்த்த வேண்டும்
ஓலங்கள் மறைந்து எங்கும்
ஒளியொன்று உதிக்க வேண்டும்

# சம்பவங்களை நேரில் கண்டவர்களே சாட்சியம் அளிப்பர்

## கண்காணிப்புக்குழு 4ஆம் 5ஆம் திகதிகளில் யாழ் நகரில் விசாரணை

யாழ்ப்பாணம், ஜன. 1

சம்பவங்களைக் கண்ணால் கண்டவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமே யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் முன்னால் சாட்சியமளிக்க வரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு, யாழ்ப்பாணச் சம்பவங்கள் பற்றி விசாரணை நடத்த இரண்டாவது தடவையாக இவ்வாரம் யாழ்ப்பாணம் வருகின்றது.

4 ஆம் 5 ஆம் திகதிகளில் இவ்விசாரணைகள் இடம்பெறும்.

டிசம்பரில் வடபகுதியில் இடம்பெற்ற ஐந்து அசம்பாவிதங்கள் பற்றி யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு விசாரிக்க உள்ளது.

சம்பவங்கள் நடைபெற்ற இடங்களுக்குச் சென்று பார்வையிடுவது சம்பந்தமாக, குழு யாழ் நகர் வந்த பின்னரே முடிவு செய்யும் என்றும் தெரிகின்றது.

விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள சம்பவங்கள் வருமாறு;

1. அரியாலை, சொழும்புத்துறைப் பகுதிகளில் ஹெலிக்கொப்டர் தாக்குதல் டிசம்பர் 20 இல் இடம்பெற்றது. 2 பேர் மரணம். 2 பேர் காயம்.

2. சுதுமலைப் பகுதியில் ஹெலிக்கொப்டர் தாக்குதல் டிசம்பர் 21 இல் இடம்பெற்றது. 9வயதுச் சிறுவன் உட்பட இரண்டு பேர் மரணம். 4 பெண்கள் உட்பட 5 பேர் காயமடைந்தனர்.

3. பொன்னாலை - வலந்தலைச் சம்பவம் டிசம்பர் 17 இல் இடம்பெற்றது. இரண்டு பேர் மரணமானார்கள். 5 பேர் காயமடைந்தனர்.

4. வல்வெட்டித்துறை, தொண்டமானாறுப்பகுதிகளில் ஹெலிக்கொப்டர்களில் இருந்து நடத்தப்பட்ட தாக்குதல்.

## லொறி வழிமறிப்பு பணம் அபகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 1

தென் இலங்கயில் இருந்து கல்முனைக்குச் சென்ற லொறி ஒன்று வழி மறிக்கப்பட்டது. அதன் உரிமையாளர் வைத்து இருந்த பத்தாயிரம் ரூபா பணம் கொள்ளை இடப்பட்டது.

மட்டக்களப்பு ஊடாக தென் பகுதிக்குத் திரும்புகையில் பக்கிளல்ல என்ற இடத்தில் வைத்து இனந் தெரியாதவர்களினால் லொறி வழி மறிக்கப்பட்டது. பணம் மற்றும் பொருள்கள் கொள்ளை இடப்பட்டன பின்னர் லொறியைப் போவதற்கு அக் கோஷ்டி அனுமதித்தது.

## நீரிழிவு நோய் அறிகுறிகள் இருந்தால் உடனடி சிகிச்சை

### ஆய்வுக் கருத்தரங்கில் வலியுறுத்து

காங்கேசன்துறை, ஜன. 1

நீரிழிவு நோய் அறிகுறிகள் காணப்பட்டதும் உடனடியாக தகுந்த வைத்திய சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தவறினால் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம்.

மாவிட்டபுரம் லயன்ஸ் சழகம் ஏற்பாடு செய்திருந்த நீரிழிவு நோய் சம்பந்தமான ஆய்வுக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். மருத்துவபீட பேராசிரியர் திரு. என். சரவணபவானந்தன் இவ்வாறு குறிப்பிட்டார்.

வீமன்காமம் மகாவித்தியாலய மண்டபத்தில் லயன்ஸ் கழகத் தலைவர், திரு ஏ. வி. சர்மா தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது.

வைத்தியத்துறை பேராசிரியர்கள், நிபுணர்கள் ஆகியோர் கலந்து கொண்டு ஆய்வுரை நிகழ்த்தினர்.

திரு. சரவணபவானந்தன் தொடர்ந்து அங்கு பேசுகையில், நீரிழிவு நோய் இன்று அதிகமாக பரவி வருகிறது. உலகில் கோடிக்கணக்கானவர்கள் இந் நோய்க்கு ஆளாகியுள்ளனர்.

மக்களைப் பீடிக்கும் கொடிய நோய்களில் இந் நோயும் ஒன்றாகும். இந் நோய் ஏற்பட்டால் உடலின் பல உறுப்புகளும் பாதிக்கப்படும் என்றார்.

மற்றும் வைத்திய கலாநிதி. எஸ். நாகநாதர் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை வைத்திய கலாநிதி. வி. ஜெகப்பிரகாசன், வைத்திய கலாநிதி. திருமதி. ரி. சரவணபவானந்தன் உட்படபலர் ஆய்வுரை நிகழ்த்தினர்.

கருத்தரங்கை அடுத்து 100க்கு மேற்பட்டவர்களுக்கு நீரிழிவு நோய் சம்பந்தமான ஆய்வுப் பரிசோதனை நடத்தப்பட்டது.



### பொய்யாமொழி

**குறள்:**
அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றுத் துணை.

**பொருள்:**
இளைஞராக உள்ளவர், பிற்காலத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணாமல் அறம் செய்ய வேண்டும். அதுவே உடல் அழியும் காலத்தில் அழியாத் துணையாகும்.

## கத்தோலிக்க ஆசிரியர் பற்றாக்குறை

### நிறைவு விழாவில் மறை ஆயர்

பருத்தித்துறை, ஜன. 1

கத்தோலிக்க ஆசிரியர்களின் எண்ணிக்கை கடந்த 25 வருடங்களாகக் குறைந்து வருகின்றது. ஆசிரியர்கள் பற்றாக்குறையினால் மறைக் கல்வியைப் போதிப்பதற்கான வாய்ப்புக்களும் அற்று வருகின்றன. கத்தோலிக்க ஆசிரிய பற்றாக் குறையைப் போக்க கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் போதிய நடவடிக்கை எடுக்க முன் வரவேண்டும்.

யாழ். மறை ஆயர் பேரருட் திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை இவ்வாறு கூறினார்.

யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்க ஆறாவது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

சங்கத் தலைவர் திரு. ஏ. எஸ். அகஸ்தீன் தலைமையில் யாழ் மறைக் கல்வி நடுநிலையத்தில் விழா நடைபெற்றது.

விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் கல்வித் திணைக்கள கல்வி அதிகாரி திரு. கே. கந்தசாமி பேசுகையில், மாணவர்களிடையே ஒழுக்கத்தைப் போதிப்பதில் கத்தோலிக்க ஆசிரியர்கள் முன்னணி வகிக்கிறார்கள். இதற்காக கத்தோலிக்க ஆசிரியர்களைப் பாராட்ட வேண்டும் என்றார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ். மாவட்டப் பொதுச் செயலாளர் திரு. சி. சிவபாதசுந்தரம், சங்கச் செயலாளர் திரு. கிறிஸ்டோபர் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

சமய சந்திகளில்

## வீரமாகாளி அம்மன் கோயில்

சாவகச்சேரி, ஜன, 1

சாவகச்சேரி சைவமகா சபையினரால் பௌர்ணமி தினங்களில் நடத்தப்படும் திருவாசக முற்றோதல் வைபவம் சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீவீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தில் நடைபெற்றது.

திருவெம்பாவைப் பூஜையைத் தொடர்ந்து பண்டிதர் திரு சி வைரவப்பிள்ளை தலைமையில் முற்றோதல் ஆரம்பமானது.

நண்பகல் மகேஸ்வர பூஜையின் பின்னர் ஆலயத்தில் பௌர்ணமி தினப்பூஜை, தீபபூஜை ஆகியவையும் இடம்பெற்றன.

சிவாசாரிய திலகம் சிவஸ்ரீ. க. சிதம்பரநாதக் குருக்கள் இவற்றை நடத்தினார்.

## பூநகரி ப. நோ. கூ. ச. கிளை

யாழ்ப்பாணம், ஜன. 1

பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை நிலையம் ஒன்று 'பண்ணித்தலை' என்னும் இடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

சங்கத்தலைவர் திரு. தி. இராசநாயகம் திறந்து வைத்தார்.

முன்னாள் கிராமசபை உறுப்பினர் திரு. சி. பொன்னம்பலம் மங்கள விளக்கேற்றினார்.

சங்க உபதலைவர் திரு. பொ தங்கராசா முதல் விற்பனையை ஆரம்பித்து வைத்தார். திரு. பொ. லோகேஸ்வரன் நன்றி சொன்னார்.

## ஒலி ஒளி நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜன 1

திருகோணமலைத் தமிழ் அகதிகளின் புனர்வாழ்வு நிதிக்காக ஈழத்துக் கலாதாரகை வழங்கும் ஒலி ஒளி நிகழ்ச்சி ஒன்று ஜனவரி 5ஆம் திகதி அச்சுவேலி மகா வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது.

அச்சுவேலி அகதிமுகாமிலும் சுற்றுப்புற வீடுகளிலும் தங்கி உள்ள 400க்கு மேற்பட்ட திருமலைத் தமிழ் அகதிகளின் புனர் வாழ்வுக்கு நிதி திரட்டுவதே இக்கலை நிகழ்ச்சியின் நோக்கம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரபல வானொலி அறிவிப்பாளர் திரு. கே. எஸ். ராஜா அறிவிப்பாளராகக் கலந்து கொள்கிறார்.

மக்கள் முகம்

## ஓய்வு பெற்றார்

வட்டுக்கோட்டை, ஜன. 1

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. ஆ. சதாசிவம் 35 வருட கால ஆசிரிய சேவைக்குப் பின் ஓய்வு பெற்றார்.

சித்தன்கேணி கலைநகரைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியரான இவர் ஆசிரியர் தராதரப் பத்திரத்துடன் 1949 ஆம் ஆண்டு ஆசிரிய சேவையில் சேர்ந்தார்.

1952-53 இல் பயிற்றப்பட்ட ஆசிரியரான துடன் 1972 இல் பட்டதாரியானார்.

தெகிவளை மெதடிஸ்த த. க. பாடசாலையில் முதலில் ஆசிரியராகப் பணிபுரியத் தொடங்கி கடைசியில் வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரியில் கடமையாற்றினார். எல்லா இடங்களிலும் பெரும்பணியாற்றி, ஆசிரியர்கள் மாணவர்



கள் பெற்றோர்கள் மதிப்பில் நன்மதிப்புப் பெற்றார்.

வட்டுக்கோட்டை காந்திஜீ கி. மு. சங்க ஸ்தாபகர்களில் ஒருவரான இவர் அதன் காரியதரிசியாக சுமார் 5 வருடங்கள் கடமையாற்றினார்.

சித்தன்கேணி சிவச்செல்வி இந்து சமய மன்றம், சித்தன்கேணி கலைநகர் நேருஜீ ச. ச. நிலையம், வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி ஆசிரியர் கழகம் ஆகியவற்றின் தலைவராகவும் கடமையாற்றினார்.

சமய, சமூகத்தொண்டுகள் செய்த இவர், நுண்கலைத்துறைகளில் ஒரு சிறந்த கலைஞருமாவார்.

## போன தினக்குறிப்பை புரட்டாதே

-பசுவூர்க்கோபி

எண்பத்தி ஐந்தே
நீ. . . : . .
எமக்களித்த சோக கீதங்கள்
நேற்றுடன்
மறையட்டும்

*

எண்பத்தி ஆறே இன்றே புறப்படு. . . .
பழைமையை எண்ணி
அழுவதன் மூலம்
எதையும் அடைந்துவிட முடியாது
எழுவதன் மூலம்
எதுகும். .
இயலும் என்பதை உணர்ந்து

*

நாளைய உனது விடிவு
நமக்காகவிருக்கட்டும்
கோழை வாழ்வதில்லை என்பதை விளக்கு
ஏழைகள் என்ற சொல்லை
எமது அகராதியிலிருந்து
எடுத்தெறி

*

புதியதோர் உலகைக் காட்டு
உனது . .
பொற்பாதங்களை அதிலே ஒட்டு - இனியும்
போன தினக்குறிப்பை
புரட்டாதே - - -

## "புத்தியிற் தெளிவு தர, புத்தாண்டே நீ வருக!"

— கவிஞர் இளங்கம்பபாரதி —

வருகின்ற ஆண்டை வரவேற்கும் முன்னால், ஓடி ஒளித்த ஆண்டிற்கு என்னுற்சாக வாழ்த்துதல்கள்!

புத்தாண்டு வந்திருக்கிறது; மீண்டும் ஒரு புதிர்போல.

''நலிந்திருக்கும் மானிடத்திற்கு நலன்களைச் சேர்க்கிறேன்'' — என்று வருகிற புத்தாண்டொவ்வொன்றும் நடித்துவிட்டுக் கழிந்து போவதால், நம்பிக்கை வற்றியிருக்கும் நரமனதுகளே ஏராளம் .... ஏராளம் புத்தாண்டுகளொவ்வொன்றிற்கும் அப்படியொரு தாராளம் ... தாராளம்.

இருட்டறையிற் சுவாசங்கள்; இல்லாமையின் கூக்குரல்கள்; இயலாமையின் முனகல்கள். இத்தனையுஞ் சுதந்திரங்கள்! நில் மானிடமே! உனக்குண்டு ... ' இன்னும் எத்தனையோ சுதந்திரங்கள்!

அநியாயக்காரர்களின் கூட்டுச் சதியில்.. நாங்கள் கவலைகளை மட்டுமே, பங்குபோட்டுக் கொண்ட பரிதாபம் பரலோக வாசிகளுக்குத் தெரிய வாய்ப்பில்லை.

சமத்துவத்தின் கழுத்தை நெரித்துச் சாகடித்த ... சஞ்சலங்களின் சாம்ராஜ்யத்தில் எங்களுக்கு எதிலும் விலங்குகள் மாட்டப் பட்டேயுள்ளன,

தட்டியபோது திறப்பதும் கேட்டபோது கொடுப்பதும் தேடியபோது கிடைப்பதும் ... புத்தாண்டொவ்வொன்றினதும் அறிமுகத்தின்போதும், புதிய — புதிய வாசகங்களாக உரைக்கப்படுகின்றன. எங்கள் பொருளாதாரங்களோ, பழைமையிற்பழைமையாய்ச் சிதைக்கப்படுகின்றன.

வயிறு விரிந்த வரலாறுகளை ஒருதரந் திருப்பிப் பார்டபோமானால் ... கயிறு திரித்த கயவர்களால் மானிடம் ஆங்காங்கே களங்கப்பட்டிருக்கும்; கறைப்பட்டிருக்கும்; ஏன்? காயங்கூடப் பட்டிருக்கும். கண்ணீர்க் கங்கையிலேயே, மானிடம் காலங்காலமாகக் குளித்திருக்கும்.

கௌதம புத்தன் கருணையின் உச்சம் கடைப்பிடிக்குங் கயவராலோ, எங்களுக்குக் கண்ணீர்தான் மிச்சம்.

இது புண்ணியவான்களின் தார்மீகம் புழுங்கிச் சாவதோ சுகமாகும்?!

எச்சிற்படுத்திய பிச்சைகளை வழங்குவதற்கே, எத்தனையோ இழுபறி அதிகாரங்கள்.

சராசரி மானிடத்தின் சரித்திரத்தை. மாசுபடுத்தும் எந்தச் சர்வாதிகாரமுஞ், சாகாமற்போனதாகச் சரித்திரமே இல்லை.

மனிதாபிமானத்தையே தொலைத்துவிட்ட மானிடத்தின் ... நெஞ்சங்களில் விழுந்திருக்கின்றன இன்று, நிரந்தர ஓட்டைகள். இன்னுமா அதனிடம் நித்திரையின் சேஷ்டைகள்?!

விழித்தெழுந்து அடைத்தாற்தான், விடிவு வருமென்பதை ...

துடித்தெழுந்து சொன்னாலும், இன்று வரை — துயரந்தான் எஞ்சியது.

பகிரப்படும் பங்குகள் எல்லாம், பலருக்கும் பொதுவானால் ...

இங்கே, துயரப்படும் மானிடமென்றொரு, துளிகூடத் தோன்றாதே.

இந்த, உறுதியிற் பற்றுவைத்தால் ...

இறுதியிற் காணப்போவதாய் எண்ணும் மோட்சத்தை,

வாழ்வின் கருதியிலேயே கண்டுவிடலாமென்பதனைச், சுத்தமாகத் தெளிவுபடுத்துகின்றேன்.

ஏனெனில்...

''இல்லாதார் நெஞ்சத்தில், இழப்பு மட்டுமல்ல சுமை; பொருள்; இருப்பவருஞ் சுமையே''

புத்தாண்டாம் இது; நான் —

— சொன்னவை உங்கள், புத்தியிற் தெளிவு தரும் ஆண்டாகவும் இருக்கட்டுமே இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளம் நிறைந்த
புதுவருட வாழ்த்துக்கள்!
நியூ எஸ். கே.
பிரிண்டிங் வேக்ஸ்
7, மின்சார நிலைய வீதி,
(2ஆம் ஒழுங்கை)
யாழ்ப்பாணம்.

# உதயன்

01-01-1986

டொபி, சாக்லேட் மேலுறைகள், பொலித்தீன் சொப்பிங் பாக் (Bags), பிளாஸ்டிக் வகைகளை
அதி விசேடமாக அச்சிடுபவர்கள்
நியூ எஸ். கே.
பிரிண்டிங் வேக்ஸ்
7, மின்சார நிலைய வீதி,
2ஆம் ஒழுங்கை
யாழ்ப்பாணம்.

## வித்தாரம்

ஹலோ முரளி! புது வருஷமும் கையுமா வாய் நிறைஞ்ச சிரிப்போடை வாருய். அது தான் நல்லது. நல்ல நாள் பெருநாளிலை அப்படி இருக்கிறது தான் சிறப்பு.

எங்கடை கஷ்டமெல்லாம் தீரும் எண்டு ஒரு நம்பிக்கை வைப்போம் இண்டைக்கு. அப்பிடி ஒரு நம்பிக்கையிலை தானே எங்கடை வாழ்க்கையே ஓடுது

புது வருஷத்திலை ஒரு நல்ல செய்தி வந்திருக்கெண்டு நீ கூத்தாடுகிருய். அது என்னடா அப்பா எனக்கும் சொல்லேன். என்ன எங்கடை பிரச்சினை தீரப்போகுதே!

எடடே உதைத்தானே நீ நல்ல செய்தியா எடுத்திருக்கிருய். பண்டாரிக்கு 58 வயதாகிறதாம். அவர் மார்ச் மாதத்தோடு பென்ஷன் எடுக்கிருராம்.

இந்த மூன்று மாதத்துக்கும் இடையிலை தன்ரை வேலையை – அது தான் இந்தியாவின்ரை சிறப்புத் தூதுவராய் இருந்து இலங்கை இனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கிற வேலையை– சரியாய் செய்து முடிக்கிருரா என்னவோ ஆருக்குத் தெரியும்.

எங்கடை இலங்கை அரசாங்கம் பார்த்தசாரதி ஒரு தமிழர் எண்டும், அவர் எங்களுக்காகப் பாடுகிருர் எண்டும் சொன்ன உடனை ராஜீவ் பண்டாரியைத் தான் தெரிந்து எடுத்தார்.

மகாத்மாவின்ரை பேரன் ரஷ்கோத்திரா இருந்த பதவிக்கு வந்தவர்தான் பண்டாரி. ரஷ்கோத்திரா பென்ஷனிலை போகையிக்கை, ஐ.நா.விலை இந்தியப் பிரதிநிதியாய் இருக்கிற நடராஜன் கிருஷ்ணன் எண்டவரைத்தான் வெளியுறவுச் செயலாளராய் நியமிக்க வேண்டும் எண்டு பார்த்தசாரதி விரும்பினுர். ஆனுல் ராஜீவ் ஏதோ தொயாகே, ஒரே அமைச்சிலை இரண்டு தமிழருக்கு ஏன் உயர் பதவியள் எண்டு நினைச்சாரோ என்னவோ பண்டாரியை நியமிச்சுப்போட்டார்,

இவர் பண்டாரியார் சிறப்புத் தூதராய் கொழும்புக்கு வரயிக்கை இஞ்சை அண்ணைமார் அவரை நல்லாக் கவனிச்சினம். அதை வைச்சுக் கொண்டு அவர் அவையின்ரை பக்கம் சாஞ்சாடினவர் தெரியுமே!

இலங்கை அரசாங்கத்தின்ரை செல்லப்பிள்ளையான பண்டாரியார் தான், திம்புவிலை எங்கடை சத்தியேந்திரா விட்டை வாங்கிக் கட்டினவர்.

எங்கடை விஷயத்திலை அன்னை இந்திரா பிடிச்ச பிடியை உவர்மகன் ராஜீவும் பிடிச்சிருந்தா இப்ப நிலைமை வேறு. இந்தப் பண்டாரி தான் ராஜீவும் ஒரு திருப்பம் எடுத்திருக்கிருர். அந்தத் திருப்பத்துக்கும் பண்டாரிக்கும் சரிவராது. அதாலை இந்த நேரத்திலை இவர் பண்டாரியார் வெளியாலை போறது நல்லதுதான்.

அப்ப இந்தப் பண்டாரியார் போனு இனி இலங்கை விஷயத்தைக் கையாள எந்தப் பூசாரியார் வருவாரோ தெரியாது.

கதையோடு கதையாய் நடராஜன் கிருஷ்ணன் எண்ட தமிழற்றை ஐ.நா. பாதுகாப்புச் சபை பிரதிநிதித்துவக் காலம் நேற்றையோடு முடிஞ்சு போனதாய் ஒரு செய்தி வந்திருக்குது.

சிலவேளை புதிய பூசாரி மாயக் கிருஷ்ணன் தானே!

முந்திப் பார்த்தசாரதியாய் வந்த கண்ணன் இனி கிருஷ்ணனுகவே வருவாரோ!

மகாபாரதத்திலை தூதுபோன கண்ணன் போலை, எங்களுக்கு ஒரு கிருஷ்ணன் வந்துதான் எங்கடை பிரச்சினையை தீர வேண்டும் எண்டு ஒரு நியதி இருக்கோ என்னவோ!

கோண்டாவி

இலங்கையில்

# தமிழர்கள் படுகொலை:

# எம். ஜி. ஆர். கவலை

சென்னை, டிச.31

இலங்கையின் அப்பாவித் தமிழ் மக்களை இலங்கை அரசும் இராணுவமும் கொன்று குவிப்பது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி இராமச்சந்திரன் கவலை தெரிவித்து உள்ளார்.

### புத்தாண்டுச் செய்தியில்

தனது புத்தாண்டுச் செய்தியிலேயே இக்கவலையை எம் ஜி. ஆர். வெளியிட்டார்.

இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண எடுத்துள்ள நல் முயற்சியை வீணுக்கும் வகையில் இலங்கை அரசு ஈடுபடுவதையும் திரு. இராமச்சந்திரன் கண்டித்துள்ளார்.

இலங்கை தமிழ் அகதிகள் பத்திரமாகவும் கண்ணியமாகவும் தாயகம் திரும்பும் வரை, இலங்கையில் உள்ள இந்தியர்களை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று பிரதமர் ராஜீவ் காந்தி கூறியுள்ளதையும் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் பாராட்டினுர்.

## மன்னிப்புச் சபை குற்றச்சாட்டுக்களுக்கு அத்துலத் முதலி மறுப்பு

கொழும்பு, ஜன. 1

சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசு மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டை, தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி மறுத்துள்ளார்.

தமிழருக்கு எதிராக நடத்தப்படும் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு லண்டனில் இயங்கும் சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசைக் கோரியுள்ளது தெரிந்ததே.

சித்திரவதை பற்றிய புகார்களை பாரபட்சமற்ற முறையில் விசாரிக்கவும் இலங்கை அரசு தவறிவிட்டதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசைக் குற்றஞ்சாட்டியும் உள்ளது

இக் குற்றச்சாட்டுக்களையே அமைச்சர் லலித் அத்துலத்முதலி மறுத்துள்ளார்.

## ரூபவாஹினி

மாலை 01-01-1986
5-00 — செய்திகள்
5-05 — குழந்தைகள் நிகழ்ச்சி
5-30 — வார அறிவுப் போட்டி
6-00 — 'புளிகாற்' —குழந்தைகள் டெலி நாடகம்
6-30 — செய்திகள் (தமிழ்)
6-55 — கலை அரங்கம்
7-25 — விளையாட்டு 1985 பிளாஷ்பாக்
8-00 — செய்திகள் (சிங்களம்)
8-25 — ஜெபர்ஸன்ஸ்
9 00 — செய்திகள் (ஆங்கிலம்)
9-30 — 1985 பிளாஷ் பாக்
10-00 — ஜப்பானிய திரைப்படம்
11-15—ஒளிபரப்புமுடிவு

மூதூரில் ஊர்காவல்படை அட்டூழியம்

## கண்காணிப்புகுழுவிடம் முறையிடப்படும்

திருகோணமலை, ஜன 1

மூதூரில் தமிழ் இளம் பெண்கள் மீது ஊர்காவல் படையினர் நடத்திய மிருகத்தனமான அட்டூழியம் குறித்து திருகோணமலை பிரஜைகள் குழு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட உள்ளது.

இத்தகவலை திருமலைப் பிரஜைகள் குழுத் தலைவரும் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களில் ஒருவருமான திரு.கே.சிவபாலன் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

மானபங்கம் செய்யப்பட்ட பின்னர் ஊர்காவல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மேரி அக்னஸ் என்ற பெண்ணின் தாய் அந்தோனியம்மா, இச்சம்பவம் பற்றி பிரஜைகள் குழுவிடம் முறையிட்டுள்ளார்.

தனது மகளுக்கு நடந்த அக்கிரமம் குறித்து சத்தியக் கடதாசி ஒன்றையும் தயாரித்து அந்தோனியம்மா பிரஜைகள் குழுவிடம் சமர்ப்பித்துள்ளார்.

## வெளியேறிய குடும்பங்கள் மீண்டும் பழைய இடங்களில் குடியமரும் சாத்தியம் இல்லை

யாழ்ப்பாணம், ஜன 1

பீதி காரணமாகப் பலாலி விமான ஓடுபாதையின் தென்கிழக்குப் பகுதியிலிருந்து வெளியேறிய குடும்பங்கள் மீண்டும் பழைய இடங்களில் குடியமரும் சாத்தியம் இல்லை.

பலாலி பிரஜைகள் குழுவினர் பலாலி இராணுவ முகாம் அதிகாரி பிரிகேடியர் ஹமில்டன் வணசிங்காவைச் சந்தித்த போது இத்தகவல் வெளியாகியது.

இப்படி வெளியேறிய குடும்பங்கள் தற்போது வயாவிளான் சாதனு பாடசாலையில் தஞ்சம் அடைந்து உள்ளன.

அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு வேறு முடிக்குரிய காணிகளில் இக்குடும்பங்களைக் குடியமர்த்துமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டு உள்ளது.

உயர்ந்து வளரும் பயிர்கள் தவிர்ந்த ஏனைய பயிர்களைத் தொடர்ந்து பயிரிட விவசாயிகள் அனுமதிக்கப்படுவர்.

விமான ஓடுபாதைக்கு அருகேயுள்ள பற்றைகளையும் மறைப்பு வேலிகளையும் அகற்றல் வேண்டும்.

விமான ஓடுபாதையின் மேற்கு எல்லையில் மிகவும் அருகாமையில் உள்ள இரண்டு கல்வீடுகள், நான்கு கொட்டில்கள் ஆகியவை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தப்படவேண்டும். சற்றுத் தூரத்தில் அவற்றை வேறு இடத்தில் மாற்றி அமைத்தல் வேண்டும்.

விமான ஓடுபாதைக்கு அருகே உள்ள காணிகளில் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு விசேஷ அடையாளக் கார்ட் வழங்கப்படும்.

மேற்கண்டவாறு இச்சந்திப்பில் இணக்கம் காணப்பட்டது.

தலைவர் திரு.எஸ்.சண்முகலிங்கம், செயலாளர் திரு எஸ். சின்னத்துரை, பொருளாளர் திரு எஸ். அருணுசலம் ஆகியோர் பலாலி பிரஜைகள் குழுவில் அங்கம் வகித்தனர்.

யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தின் ஏற்பாட்டில் திங்கட்கிழமை இச்சந்திப்பு நடந்தது.

## ஒட்டுத் தொழிற்சாலையில் மீண்டும் கொள்ளை

### சிங்களவர் கடத்தப்பட்டு விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.1

அயபாறை இரகம ஒட்டுத் தொழிற்சாலையில் இரண்டாவது தடவையாக கடந்த ஞாயிற்றுக் கிழமையும் கொள்ளை இடம்பெற்றது.

இனந்தெரியாத நபர்கள் ஆயுதங்களுடன் தொழிற்சாலைக்குள் புகுந்து 1 டிராக்டர், 1 ஜெனரேட்டர், 2 டைப்ரைட்டர்கள், மின் உபகரணங்கள் ஆகியவற்றைக் கொள்ளை இட்டனர்.

பின்னர் தொழிற்சாலையில் இருந்து 3 சிங்களத் தொழிலாளர்களைக் கடத்திச் சென்று, இடைவழியில் விட்டு விட்டனர். டிசம்பர் 21 இல் முதலாவது கொள்ளை இடம்பெற்றது. அச்சமயம் சம்பளப் பணமான 72,000 ரூபா கொள்ளை இடப்பட்டது.

## நிலாவெளியில் இராணுவ முகாம்

### இதுவரை 168 பேர் கைது

திருகோணமலை, ஜன. 1

நிலாவெளிக் கிராமத்துக்கு அருகில் ஆயுதப் படையினர் முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்.

இதன் காரணமாக மக்கள் நிலாவெளிக்கு அப்பால் செல்லமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது

168 பேர் வரையில் ஆயுதப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

என்ன நடந்தது, யார் இறந்தார்கள் என்பன குறித்து ஒன்றுமே தெரியாத நிலையில் நிலாவெளி.கும்புறுபிட்டி.தமிழ் மக்கள் பயந்து போய் இருக்கிறுர்கள்.

அப்பகுதி முற்றுகையிடப்பட்ட பிரதேசம் போன்று உள்ளது.

ஆயுதப்படையினர் இன்னும் தேடுதல் வேட்டையைக் கைவிடவில்லை.

## ஐவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 1

காரைநகருக்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் உள்ள கடற்பிரதேசத்தில் வள்ளம் ஒன்றில் சென்று கொண்டிருந்த ஐந்துபேரை கடற்படையினர் நேற்றுக் காலை கைது செய்தார்கள்.

இவர்களிடமிருந்து ரி.வி, டெக்குகள், சிப்புகள் ஆகியவை கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அர்த்தமுள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. டிக்ஸிற்றிடம் தெரிவித்தார்.

சமாதானத் தீர்வு ஒன்றைக் காண்பதிலேயே இலங்கையும் அக்கறையாக இருப்பதாகவும் ஜனதிபதி தெரிவித்தாராம்.

இலங்கை — இந்திய ஒத்துழைப்பு நீடிக்க வேண்டுமென்பதே தமது பெரு விருப்பம் எனவும் ஜனதிபதி குறிப்பிட்டார்.

## அடையாள அட்டை

யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக, அடையாள அட்டை செய்து வழங்கப்படுகின்றது. சகல நிறுவனங்களும், அரச நிறுவனங்களும் எம்முடன் தொடர்பு கொண்டு, விபரங்களைத் தெரிவித்துக் கொள்ளலாம்.

கலர் புகைப்படங்களாயினும் கறுப்பு வெள்ளை புகைப்படமாயினும் ஒட்டித்தரப்படும். மாதிரி அடையாள அட்டைகளை நேரில் பார்வையிடுங்கள்.

# ஞானம்ஸ்

ஸ்ருடியோ

யாழ்ப்பாணம்.

## விளையாட்டரங்கு

## சென். அந்தனீஸ் அணி சாதனை

### கோண்டாவிலில் விறுவிறுப்பான உதைபந்தாட்டம்

— விளையாட்டுச் செய்தியாளர்:- சண். ஜோண்சன் ...

யாழ்ப்பாணம், ஜன. 1

பாஷையூர் சென் அந்தனீஸ் விளையாட்டுக்கழக அணி கோண்டாவில் குமரன் விளையாட்டுக் கழக அணியை 14க்கு 2 என்ற கோல் அடிப்படையில் நேற்று தோற்கடித்தது.

இதன்மூலம் திருநெல்வேலி பாரதி சனசமூக நிலைய ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட 'நொக் கவுட்' போட்டியின் ஒரு ஆட்டத்தில் ஆகக் கூடுதலான கோல்களைப் பெற்ற பெருமையை அந்தனீஸ் கழகம் பெற்றுக்கொண்டது.

நேற்று நடைபெற்ற இப் போட்டியில் சென். அந்தனீஸ் விளையாட்டுக் கழக அணியினர் மிகவும் திறமையாக ஆடினுர்கள்.

இரண்டாவதாக நடைபெற்ற யாழ்ப்பாணம் முஸ்லீம் விளையாட்டுக் கழக (பிரண்ஸ்) அணிக்கெதிரான போட்டியில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகம் 9க்கு 0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது.

பொற்பதி விளையாட்டுக் கழகத்தின் சார்பில் கு சதீஸ்குமார் திறமையாக ஆடி ரசிகர்களைக் கவர்ந்தார்.

இப்போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாக முறையே எம். குணசிங்கம், எம். தேவதாஸ் ஆகியோர் கடமையாற்றினர்.

யாழ் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் இப் போட்டிகள் கோண்டாவில் சந்திக்கு அண்மையில் உள்ளவோக்கேஸ் மைதானத்தில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

இதே வேளை இந்தச் சுற்றுப்போட்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி வென்றது.

செல்வபுரம் உதய சூரியன் விளையாட்டுக் கழக அணியைப் பாடும் மீன் அணி 4—2 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்தது.

## கார் விபத்தில் 2 பேர் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 1

யாழ் ஆஸ்பத்திரி வீதிச் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் இரண்டு பேர் படுகாயம் அடைந்தனர்.

அந்த விபத்துப் பற்றிக் கூறப்படுவதாவது:-

மாலை 5-45 மணி அளவில் படுவேகமாக வந்த கார் ஒன்று முதலில் சைக்கிளில் மோதியது. பின்னர் மின்கம்பத்தில் மோதியது.

சைக்கிளில் வந்த இரண்டு பேரும் தூக்கி எறியப்பட்டதால் படுகாயம் அடைந்தனர்.

பெயர்கள் வருமாறு:

1. மருசிலன் சந்திரசேகரம், வயது 25, குருநகர் வாசி.
2. சின்னத்துரை சுதந்திரராஜா, வயது 24, குருநகர் வாசி.

காயமடைந்த சாரதியின் பெயர் சுப்பு இராசன் வயது 25. ஆஸ்பத்திரி வீதி வீடமைப்புத் திட்டத்தைச் சேர்ந்தவர்.

## ஆசிரியர் பதவி

உடுவில் மகளிர் கல்லூரியில் ஆரம்ப பிரிவிற்கு ஆசிரியர் தேவை. அண்மையில் ஓய்வு பெற்ற ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

அதிபர்
உடுவில்
மகளிர் கல்லூரி,
சுன்னுகம்.

## உலக மனச்....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

போராளிகள் அல்லர்.

இலங்கைத் தமிழர்மீது தாக்குதல் நடத்துவதையும், தமிழின ஒழிப்பில் ஈடுபடுவதையும் உடனடியாக நிறுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்தும்படி தமிழர் விடுதலைக் கூட்டணி 'உலக மனச்சாட்சி'யிடம் வேண்டுகோள் விடுகின்றது.

இப்படி கூட்டணி தனது அறிக்கையில் கூறியுள்ளது.

## வின்னிமண்டேலா மீண்டும் கைது

ஜோஹன்னஸ்பேர்க், டிச. 31

தென்னுபிரிக்க விடுதலை வீராங்கனை வின்னி மண்டேலா இன்று(செவ்வாய்க்கிழமை) மீண்டும் கைது செய்யப்பட்டார்.

ஜோஹன்னஸ்பேர்க்கை நோக்கி வின்னி மண்டேலா காரில் சென்று கொண்டிருக்கையில் பொலீஸார் காரைக் கலைத்துப் பிடித்தனர்.

தடை உத்தரவு ஒன்றை மீறி நகருக்குள் சென்றதற்காக கடந்த எட்டு நாட்களில் இரண்டாவது தடவையாக அவர் கைது செய்யப்பட்டிருக்கிறுர்.

பாட்டுப் பிரியர்களுக்கு
ஓர் புத்தாண்டு நற்செய்தி!
இலங்கையின் முதல்
ஓடியோ கிளப்
இன்று முதல் ஆரம்பம்!
ஒலிப்பதிவு செய்த ஒரிஜினல் பாட்டுக் கசற்றுகள் வாடகைக்கு.
நியூ விக்ரேஸ்
23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
மலிவு விற்பனை
இன்று ஒருநாள் மட்டும்! (1-1-86)
மக்சல் ஒரிஜினல் கசற் — ரூபா 21.50 (பழைய விலை 24ரூபா)
மக்சல் பாடல்கள் பதிவு செய்த கசற் — ரூபா 29.50 (பழைய விலை 35ரூபா)
நியூ விக்ரேஸ்
23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 23532

அன்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு
எமது உளம் நிறைந்த
1986 புதுவருட
வாழ்த்துக்கள்
வீடியோ விஷன்
213, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
உங்கள் வாழ்வினிலே ஒரு நாள்! அதுவே உங்கள் உள்ளங்களின் இனிய நினைவு நாள்.
நிகழ்ந்த நிகழ்வுகளை காலமெல்லாம் தத்ரூபமாகக் கண்டு களியுங்கள்.
வீடியோ விஷன் ஒளிப்பதிவு மூலம் மங்கள நாட்கள் மகிழ்ச்சி பெறும் வண்ணம் அதி சிறந்த வீடியோப் படம் எடுக்கும் தொழில் நுட்பத்தில் வட இலங்கையில் புகழ்பெற்றவர்கள்
வீடியோ விஷன்
ஸ்தாபனத்தார்.
வீடியோ விஷன்
என்றும் உங்கள் உள்ளக் களிப்பில்

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207,மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், வெளியிட்ட திகதி 01-01-1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org